# யோவான் ஸ்நானகன் இயேசுவுக்கு ஞானஸ்நானம் அளித்தான்

**ஜெபம்:** “அன்பான கர்த்தாவே, நீர் ஒரே தேவன் என்பதையும், மூன்று ஆள்தத்துவங்களை உடையவர் (three persons) என்பதையும் இதையே விசுவாசிகள் பரிசுத்தமான திரித்துவம் என்று அழைக்கின்றனர் என்பதையும் பிள்ளைகள் புரிந்து கொள்ள இந்தப் பாடத்தின் மூலம் உதவுவீராக.”

குழந்தைகளின் வயதுக்கும் தேவைகளுக்கும் ஏற்ற கல்வி செயல்பாடுகளைத் தெரிந்து கொள்க.

மத்தேயு 3:1-17 லிருந்து இயேசுவின் ஞானஸ்நானம் பற்றிய கதையை ஒரு பெரிய பிள்ளையோ அல்லது ஆசிரியரோ கூறவும்.

**விளக்குக:**

- திரித்துவத்தின் மூன்று நபர்களும் (persons) இணைந்து பணியாற்றுவதையே இயேசுவின் ஞானஸ்நானம் காட்டுகிறது.
- இந்த மூன்று நபர்களும் ஒரே தேவனே, ஒன்றாகவே செயலாற்றுகின்றனர், அவர்கள் மூன்று கடவுள்கள் அல்ல.
- ஒரே தேவனில் இருக்கும் மூன்று நபர்கள் என்பது பற்றிய இரகசியத்தை தேவன் ஒருவரால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.



பின்வரும் கேள்விகளைக் கேட்கவும். *(ஒவ்வொரு கேள்விகளுக்கும் பின்னர் பதில் உள்ளது)*

- யோவான் யாருக்காக பாதையை செவ்வைப் படுத்துகிறார்? (3)
- யோவான் ஞானஸ்நானம் கொடுத்ததும் மக்கள் என்ன செய்தனர்?<br>(தங்கள் பாவத்தை அறிக்கை இட்டனர். வச.6)
- தங்கள் பாவத்தை அறிக்கை இடாத மதவாதிகளை எவ்வாறு யோவான் எச்சரித்தார்? (8)
- மனந்திரும்பும் மக்களுக்கு இயேசு எதனால் ஞானஸ்நானம் தருவார்?<br>(பரிசுத்த ஆவியினால். வச.12)
- இயேசு ஏன் ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ள வேண்டியதாய் இருந்தது?<br>(பாவிகளுக்கு ஒரு முன் மாதிரியாக எல்லா நீதியையும் நிறைவேற்ற. வச. 15)
- ஞானஸ்நானத்தின் போது திரித்துவத்தின், மூன்று நபர்களும் எவ்வழிகளில் தோன்றினர்? (குமாரன் ஞானஸ்நானம் பெற்றார், ஆவியானவர் அவர் மேல் இறங்கினார், பிதா பேசினார், வசனம் 16-17)

இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது திரித்துவம் செயல் பட்டதை **நாடகமாக்குக** (மத்.3:1-7).

- **பிள்ளைகள்** இந்த நாடகத்தை அரங்கேற்ற சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும்.
- உங்கள் போதனை நேரத்தை உபயோகித்து பிள்ளைகள் இந்த நாடகத்தை தயாரிக்க உதவுங்கள்.

- எல்லா பகுதிகளையும் உபயோகிக்க வேண்டும் என்ற அவசியமில்லை.
- **பெரிய பிள்ளைகள்** சிறியவர்களுக்கு உதவட்டும்.
- யோவான் ஸ்நானகன், இயேசு, கதை கூறுபவர் ஆகிய வேடங்களைப் **பெரிய பிள்ளைகளோ,** பெரியவர்களோ ஏற்கலாம்.
- பார்வையாளர்கள், பரிசேயர், சதுசேயர் ஆகிய வேடங்களை **சிறியவர்கள்** ஏற்கவும்.

**கதை கூறுபவர்:** மத்தேயு 3:1-12 ல் இருந்து கதையின் முதல் பகுதியை கூறுக. பின் சொல்ல வேண்டியது, “யோவான் ஸ்நானகன் கூறுவதைக் கேளுங்கள்.”

**யோவான்** (சத்தமிட்டு) “கர்த்தருடைய வருகைக்காக ஆயத்தப்படுங்கள்: பாவத்தை அறிக்கையிட்டு மனம் திரும்புங்கள்.”

**பார்வையாளர்கள்:** “நான் பாவத்தில் இருந்து மனம் திரும்புகிறேன்!” “எனக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்.”

**பரிசேயன்:** “நான் மதசார்புடைய பரிசேயன். நான் என் வாழ்க்கையை மாற்ற அவசியமில்லை!”

**சதுசேயன்:** “நான் ஒரு சதுசேயன். நான் ஞானஸ்நானம் பெற்று எவ்வளவு நல்லவன் என்று காட்டுவேன். நான் மனம் திரும்ப வேண்டிய அவசியம் இல்லை!”

**யோவான்:** (சத்தமாக) “பாம்புகளான பரிசேயர்களே! மனம் திரும்புங்கள்! சீக்கரமாக இன்னொருவர் வருவார். அவர் உங்களுக்கு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் தருவார். தேவனுக்கு கீழ்ப்படியுங்கள்! அல்லது நியாயத்தீர்ப்பாகிய அக்கினியை எதிர் கொள்ள வேண்டியதாய் இருக்கும்.”

**கதைகூறுபவர்:** மத்தேயு 3:13-17 லிருந்து கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும். பின் சொல்ல வேண்டியது, “யோவான் ஸ்நானகனிடம் இயேசு கூறுவதைக் கேளுங்கள்.”

**இயேசு** : “யோவானே! நீ எனக்கு ஞானஸ்நானம் தர வேண்டும்!”

**யோவான்:** “இயேசுவே! நான் அதற்குத் தகுதியானவன் இல்லை! நீரே எனக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்!”

**இயேசு** : “நீதியானவற்றை எல்லாம் நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும். நான் பாவிகளுக்கு ஓர் உதாரணமாகத் திகழ வேண்டும்!”

**யோவான்:** இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது போல நடிக்க வேண்டும். பின் மேலே அண்ணாந்து பார்த்து கூறுவது, “இதோ! இயேசுவின் மேல் பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல இறங்கி வருகிறார்.”

**பார்வையாளர்கள்:** மேலே சுட்டிக் காட்டி சத்தம் இடுதல், “கேளுங்கள்!” பின் கூறுவது: “வானத்தில் இருந்து ஒரு சத்தம்!”

**யோவான்:** “இயேசுவைப் பற்றி பிதாவாகிய தேவன் பரலோகத்தில் இருந்து என்ன கூறினார் என்று கேட்பீர்களா? அவர், ‘இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாய் இருக்கிறேன்’ என்று கூறினார். தேவன் நம்மிடம் பேசினார்.”

**கதைகூறுபவர்:** உதவி செய்த யாவருக்கும் நன்றி கூறுகிறார்.

**கேள்விகள்:** இந்த நாடகத்தை சிறுவர்கள் பிள்ளைகளுக்கு நடித்துக் காட்டினால் மேலே உள்ள கேள்விகளையும் பெரியவர்களிடம் கேட்கவும்.

**கேள்வி:** திரித்துவம் ஒரே தேவனாக இருப்பதால், திரித்துவத்தின் நபர்கள் ஒன்றாகப் பணியாற்றும் வேறு உதாரணங்களை கூறுக. (பிள்ளைகள் பதிலைக் கூறட்டும் (வேறு உதாரணங்களாக படைப்பு, இயேசுவின் உயிர்த்தெழுதல், நமது இரட்சிப்பு ஆகியவற்றைக் கூறலாம்.

லூக்கா 9:35 ஐ மனப்பாடம் செய்க.


சங்கீதம் 2:7,8,10,11, ஐ நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

பெரிய பிள்ளைகள் விரும்பினால் திரித்துவத்தில் உள்ள நபர்களைப் பற்றிய ஒரு வரைபடத்தை அவர்கள் வரையலாம்.

திரித்துவம் அல்லது இயேசுவின் ஞானஸ்நானம் பற்றி பெரிய பிள்ளைகள் படம் வரைக.

படம்: இறங்கி வரும் ஒரு புறாவின் படத்தை வரைக. ஆராதனை வேளையில் பிள்ளைகள் படத்தைப் பெரியவர்களுக்குக் காட்டி, இயேசுவின் நாமத்தினாலே நமது பாவங்களை மன்னிக்குமாறு நாம் தேவனிடம் கேட்கும் போது இயேசு எவ்வாறு நம்மை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானப்படுத்துகிறார் என்பதை இது காட்டுகிறது என்று விளக்கவும்.






ஜெபம்: "பரிசுத்தமான தேவனே, நீரே ஒரே மெய்யான தேவன். பிதா குமாரன், பரிசுத்த ஆவியாகிய மூவராய் நீர் இருப்பதால் நாங்கள் உம்மைத் துதிக்கிறோம். நாங்கள் உமது பிள்ளைகளாய் இருக்கும் படியாக இயேசுவின் ஜீவனுக்குள்ளாக உமது ஆவியினால் எங்களுக்கு ஞானஸ்நானம் அளிப்பதற்காய் நன்றி".

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net